


**வாரந்தோறும் ஞாயிறு காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.**

பயிற்சி கட்டணம் : லஞ்சம் வாங்க மாட்டேன் என்ற உறுதிமொழி மட்டும்

**ஆயக்குடி மரத்தடி மையத்திற்கு**
**ஆயிரக்கணக்கில் மாணவ மாணவிகள் பயில வர காரணம்**
**உண்மை, உழைப்பு, நம்பிக்கை** மட்டுமே.

**இந்த வாரத்திற்கான (11.08.2024) (PDF) வழங்கியவர்,**
**நமது மரத்தடி மாணவரும், செங்கல்பட்டு - தலைமை சர்வேயருமான,**
திரு. **ப.சுபாஷ் சந்திரபோஸ்** அவர்களுக்கும்,
**நமது மரத்தடி மாணவரும், மதுரை மாவட்ட சர்வேயருமான,**
திரு. **மூ.சிவா** அவர்களுக்கும்
**ஆயக்குடி மரத்தடி மையத்தின்** சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.





“மரத்தடி மகத்துவம்”

**P.ராமமூர்த்தி** B.E., (Agri) M.B.A.,
**இயக்குநர்,**
**மரத்தடி இலவசப் பயிற்சி மையம், நந்தவன மரத்தடி,**
**ஆயக்குடி, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.**
**Mob : 94863 01705, 79041 48183.**

# <u>தமிழர் பண்பாடும், வரலாறும்</u>

1. பொருத்துக?

a) தங்கத்தால் ஆன தொங்கல் அணி - 1. கீழடி

b) நெல்மணிகளைப் பதித்து அடையாளமிடப்பட்ட சுடுமண்ணில் செய்யப்பட்ட அச்சு - 2. பொருந்தல்

c) செம்மணிக் கற்கள் பதித்த வெண்கலத்தால் செய்யப்பட்ட புலி - 3. ஆரோவில்

d) பெருங்கற்கால வெண்கல கிண்ணம் - 4. கொடுமணல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **<u>A)</u>** | **<u>2</u>** | **<u>1</u>** | **<u>4</u>** | **<u>3</u>** |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

2. நன்கு வடிவமைக்கப்பட்ட யவானர்களின் கப்பல் தங்கம், பிற உலோகக் காசுகளுடன் முசிறித் துறைமுகத்திற்கு வந்து மிளகை ஏற்றிச் சென்றதாகக் குறிப்பிடும் நூல்?

a) புறநானூறு b) நற்றிணை c) அகநானூறு d) குறுந்தொகை

3. அகழாய்வின் போது கீழ்க்கண்ட எந்த இடத்தில் நெல்மணிகள் கண்டறியப்பட்டது?

a) கொடுமணல் **<u>b) பொருந்தல்</u>** c) அழகன்குளம் d) கீழடி

4. கீழ்க்கணடவற்றுள் சரியான கூற்றைத் தேர்க?

1. கொடுமணல் மற்றும் குட்டூர் அகழாய்வில் இரும்பு உருக்கு உலைகள் கண்டறியப்பட்டுள்ளன.

2. கேரளத்தின் பட்டணத்தில் பொன்னை உருக்கும் உலைகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

3. வனப்பகுதிகளில் இடம்விட்டு இடம் மாறி சாகுபடி செய்யும் முறை புனம் எனப்பட்டது.

a) 1,3 b) 1,2 c) 2,3 **<u>d) அனைத்தும்</u>**

5. கீழ்க்கண்டவற்றுள் தவறான செய்தி எது?

1. சங்ககால மக்கள் கண்ணாடி மணிகளைச் செய்யும் முறையை அறிந்திருந்தனர்.

2. தங்கத்தலான அணிகலன்களைச் சங்க கால மகளிர் பரவலாக அணிந்திருந்தனர்.

3. வட இந்தியாவில் காணப்பட்ட சாதி அமைப்பு தமிழகத்தில் வேரூன்றவில்லை.

**<u>4. கீழடியில் முத்துக்குளித்தல் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது</u>**

6. கீழ்க்கண்டவற்றில் ஒருபொருளுடைய சொற்களில் அல்லாதது எது?

a) பரி b) தெப்பம் c) கலம் **<u>d) சங்கம்</u>**

7. எகிப்தின் பெர்னி கேயில் கண்டெடுக்கப்பட்ட மிளகு வைக்கப்பட்டிருந்த தமிழகத்தின் பானையில் குறிக்கப்பட்டிந்த பெயர்?

a) பெரும்பத்தன் b) காவிதி **<u>c) சாத்தன்</u>** d) திசன்

8. கீழ்க்கண்டவற்றுள் சரியானது எது?

1. பெரும்பத்தன் கல் தாய்லாந்து நாட்டின் குவான் லுக்பாட் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டது.

2. இது தங்கத்தின் தரத்தை அறிய உதவும் உரைகல்.

3. தமிழ் இலக்கியங்கள் தென்கிழக்காசியாவை சுவர்ணபூமி என்று குறிப்பிடுகின்றன.

4. யவனர் எனும் சொல் கிரேக்கப் பகுதியான 'அயோனியர்' என்பதிலிருந்து வந்தது.

a) 1,2,3 b) 2,3,4 c) 1,3,4 **<u>d) அனைத்தும்</u>**

9. குதிரைச் சேனந்தில் பயன்படும் இரும்பு வளையங்கள் கண்டறியப்பட்ட இடம்?

a) கீழடி **<u>b) கொடுமணல்</u>** c) பட்டணம் d) ஆதிச்சநல்லூர்

10. கண்ணாடி மணி செய்யும் தொழிலகங்கள் இருந்த ஊர்கள்?

a) கீழடி, பட்டணம் **<u>b) அரிக்கமேடு, குடிக்காடு</u>**

c) கொடுமணல், அழகன்குளம் d) தேரிருவேலி, உறையூர்

11. "காயல் சிறந்த நகரம்" - என்று விவரித்த வெனிஸ் நகரப்பயணி யார்?

a) வாஸ்கோடகாமா b) அல்பெருனி

**<u>c) மார்க்கோபோலோ</u>** d) மெகஸ்தனிஸ்

12. கீழ்க்கண்ட எந்த நூலில் கொடுமணல் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன?

a) பரிபாடல் **<u>b) பதிற்றுப்பத்து</u>** c) நற்றிணை d) நெடுநல்வாடை

13. சேரன் செங்குட்டுவனின் சமகால இலங்கை அரசன்?
a) ஐந்தாம் மகிந்தன் **b) இரண்டாம் கயவாகு**
c) மூன்றாம் கயவாகு d) நான்காம் மகிந்தா

14. சங்ககாலப் பாண்டிய மன்னர்களுள் புகழ்பெற்றவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன், தலையாலங்கானம் எனும் இடம் தற்காலத்தில் எந்த மாவட்டத்தில் உள்ளது?
a) நாகப்பட்டினம் b) திருவாரூர் **c) தஞ்சாவூர்** d) சேலம்

15. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ளது எது?
1. கோவை - குறிப்பிட்ட கருத்திலான வரிகளைக் கொண்டிருக்கும்.
2. கலம்பகம் - ஒரு பத்தியின் முடிவு அடுத்த வரிக்கு துவக்கம்.
3. பரணி - அரசன் / தலைவனின் வெற்றி, வீரத்தைப் புகழ்வது.
a) 1,2 b) 2,3 c) 1,3 **d) அனைத்தும்**

16. ஔவையார் என்ற சொல்லின் பொருள்?
a) மூத்தபெண் b) கற்றறிந்த பெண்
c) கற்றறிந்த முதுமகள் **d) மதிப்புக்குரிய பெண்**

17. காஞ்சியை ஆண்ட தொண்டைமானுக்கும், தகடூரை ஆண்ட அதியமானுக்கும் நிகழவிருந்த போரைத் தடுத்து நிறுத்தியவர்?
a) கபிலர் b) மோசிக்கீரனார் **c) ஔவையார்** d) நச்செள்ளையார்

18. பண்பாடு என்ற சொல்லை தமிழில் முதன்முதலில் அறிமுகம் செய்தவர்?
a) திருவள்ளுவர் **b) டி.கே.சிதம்பரனார்** c) கம்பர் d) சாத்தனார்

19. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியுள்ளது எது?
1. உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே - தொல்காப்பியம்
2. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் - கலித்தொகை
3. பண்புடையார் பட்டுண்டு உலகம் - திருக்குறள்
a) 1,2 b) 2,3 c) 1,3 **d) 1,2,3**

20. நிலையாமை குறித்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ள சங்கநூல்?
**a) மதுரைக்காஞ்சி** b) குறிஞ்சிப்பாட்டு
c) மலைபடுகடாம்d) ஐங்குறுநூறு

21. ‘‘விருந்தே தானும் புகுவது புனைந்த யாப்பின் மேற்றே’’ என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
a) சிலப்பதிகாரம் b) நன்னூல்
**c) தொல்காப்பியம்** d) மணிமேகலை

22. ‘‘............ கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளிச்
செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்
புல்லி நல் நாட்டு’’ இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்?
a) சிலப்பதிகாரம் b) புறநானூறு
**c) அகநானூறு** d) மணிமேகலை

23. பழந்தமிழ் இலக்கியத்தில் உணவு சமைக்கும் முறைகளைப் பற்றிக் குறிப்பிடும் நூல்?
a) சிறுபானாற்றுப்படை **b) மடைநூல்**
c) பெருங்கதை d) மணிமேகலை

24. ‘‘பிறர்நோயும் தம்நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்’’ - இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
**a) கலித்தொகை** b) பதிற்றுப்பத்து c) மதுரைக்காஞ்சி d) அகநானூறு

25. ‘‘அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்’’ - இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்?
a) தொல்காப்பியம் **b) நற்றிணை** c) பதிற்றுப்பத்து d) திருக்குறள்

26. உணவிடுவதற்காக ஒருவன் தன் வீரவாளையும் ஈடுவைத்த செய்தியைக் குறிப்பிடும் நூல்?
a) **புறநானூறு** b) பரிபாடல் c) கலித்தொகை d) அகநானூறு

27. "நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
சொற்புடை பெயர்தலோ இலரே" - எனும் வரிகள் இடம் பெற்றுள்ள நூல்?
a) பதிற்றுப்பத்து b) பரிபாடல் c) **நற்றிணை** d) பழமொழி

28. விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை "விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை" என்றவர்?
a) ஔவையார் b) இடைக்காடனார்
c) **பெருங்குன்றூர்க்கிழார்** d) பக்குடுக்கை நன்கணியார்

29. ஆய் அண்டிரன் எனும் குறுநில மன்னன், தன்னை நாடி வந்த புலவர்களுக்கு வாரி வழங்கிய யானைகளின் எண்ணிக்கை "வான்மீன் பல பூப்பினும் ஆனாது மன்னே" என்று பாடியவர்?
a) நரிவரூவத் தலையார் b) கோதமனார்
c) சிறுவெண்டேரையார் d) **மூடமோசியார்**

30. "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்றவர்?
a) கல்லாடனார் b) நெட்டிமையார்
c) **ஔவையார்** d) குடவாயிற்கீரத்தனார்

31. நாலடியாரைத் தொகுத்தவர்?
a) **பதுமனார்** b) கல்லாடனார்
c) கோதமனார் d) இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்

32. கரிகாற் பெருவளவன் மீது பட்டினப்பாலையைப் பாடி பதினாறு நூறாயிரம் பொன் பெற்றவர்?
a) அரிசில் கிழார் b) **கடியலூர் உருந்திரங்கண்ணனார்**
c) கபிலர் d) காக்கைப்பாடினியார்

33. பொருத்துக?
a) செம்முது பெண்டு - 1. புறநானூறு
b) செம்முது செவிலியர் - 2. அகநானூறு
c) செம்முகச் செவிலியர் - 3. நெடுநல்வாடை
d) தொன்முது பெண்டிர் - 4. மதுரைக்காஞ்சி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | **1** | **2** | **3** | **4** |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 3 | 4 | 1 |

34. கூரிய அறிவும் முதுமையும் உடைய பெண்டிரை 'முதுசெய் பெண்டிர்', 'முதுவாய்ப் பெண்டு' ஆகிய அடைமொழிகளால் குறிப்பிடும் நூல்?
a) முல்லைப்பாட்டு b) **அகநானூறு** c) மதுரைக்காஞ்சி d) புறநானூறு

35. பெருமுது பெண்டிர் எனக் குறிப்பிடும் நூல்?
a) **முல்லைப்பாட்டு** b) அகநானூறு c) மதுரைக்காஞ்சி d) புறநானூறு

36. நெல்லை விற்றுப் பசும்பொன்னை ஈடாகாப் பெறாமல் பால் தரும் எருமைகளையும், நற்பசுக்களையும், எருமைக்கன்றையும் ஈடாக வாங்கும் பெண்ணைப் பற்றிக் குறிப்பிடும் நூல்?
a) அகநானூறு b) பட்டினப்பாலை
c) **பெரும்பாணாற்றுப்படை** d) சிறுபாணாற்றுப்படை

37. முதிய பெண்டிர் திருமணச் சடங்கின் போது பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களில் உள்ள நீரை "சிறு மண்டை" எனும் அகன்ற வாயுடைய கலத்தில் பெய்து மணமக்களை நீராட்டுவர் என்று குறிப்பிடும் நூல்?
a) முல்லைப்பாட்டு b) **அகநானூறு** c) மதுரைக்காஞ்சி d) புறநானூறு

38. "எத்திசை செலினும் அத்திசை சோறே" என்றவர்?
a) அரிசில் கிழார் b) **ஔவையார்** c) பரணர் d) பாரிமகளிர்

39. கீழ்க்கண்டவற்றுள் எது நற்றிணைக்குரிய செய்தி?
a) அணங்குடை நெடுவரை b) சூர்ச்சுனை
c) அறுகுடை முந்நீர் d) **பெருந்துறைப் பரப்பின் அமர்ந்து உறை சுணங்கோ**

## அரசியலமைப்பு

1. சரியாக பொருந்தியுள்ளது எது?
   1, 22-வது சட்டத்திருத்தம் 1969 - திரிபுரா
   2. 35-வது சட்டத்திருத்தம் 1974 - சிக்கிம்
   3. 12-வது சட்டத்திருத்தம் - 1962 - கோவா
   4. 27-வது சட்டத்திருத்தம் 2000 - உத்திரகாண்ட்
   a. 1, 2, 3 மட்டும் b. 2, 3, 4 மட்டும் c. 1, 3, 3 மட்டும் **d. அனைத்தும்**
2. மாநிலங்களவைக்கு மட்டுமே உள்ள சிறப்பு அதிகாரங்கள் எவை?
   1. விதி 249, 2. விதி 312, 3. விதி 110. 4. விதி 117
   **a. 1, 2 மட்டும்** b. 2, 3 மட்டும் c. 3, 4 மட்டும் d. 1, 4 மட்டும்
3. பொருளாதார புள்ளி விபரத்தை வெளியிடுவது யார்?
   a. RBI b. நிதி ஆலோசகர் **c. நிதித்துறை** d. தொழில்துறை
4. மதிப்பீட்டுக்குழு பற்றிய கீழ்க்கண்டகூற்றுகளுள் சரியானது எது?
   1. சுதந்திரத்திற்குப் பிறகு மதிப்பீட்டுக்குழு அமைக்க பரிந்துரைத்தவர் - ஜான்மாத்தாய்
   2. இதன் தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 30
   3. இதில் ராஜ்யசபை உறுப்பினர்கள் எவரும் இடம்பெற மாட்டார்கள்
   4. இதன் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்படுகின்றனர்
   a. 1, 2, 3 மட்டும் b. 2, 3, 4 மட்டும் c. 1, 3, 4 மட்டும் **d. அனைத்தும்**
5. பொதுக்கணக்குக் குழு பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?
   1. இது 1919 இந்திய அரசுச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது
   2. இதில் உள்ள 22 உறுப்பினர்களில் 15 பேர் மக்களவையிலும் 7 பேர் மாநிலங்களவையிலும் தேர்வு செய்யப்படுகின்றனர்
   3. இதன் தலைவர் சபாநாயகரால் நியமிக்கப்படுகிறார்
   4. 1967 முதல் இதன் தலைவர் எதிர்கட்சியிலிருந்து தேர்வு செய்யப்படுகிறார்
   a. 1, 2, 3 மட்டும் b. 2, 3, 4 மட்டும் c. 1, 3, 4 மட்டும் **d. அனைத்தும்**
6. சரியான கூற்று எது?
   1. பல்வந்தராய் குழு அறிக்கையை சமர்ப்பித்த ஆண்டு 1957
   2. பல்வந்தராய் மேத்தாவின் அறிக்கை பஞ்சாயத்து ராஜ்ய முறையின் மகாசாசனம் ஆகும்
   3. பல்வந்தராய் குழு மூன்ற அடுக்குமுறை உள்ளாட்சி அரசாங்கத்தை பரிந்துரை செய்தது
   4. மூன்று அடுக்குமுறை கிராம பஞ்சாயத்து, பஞ்சாயத்து சமிதி, மாவட்ட பஞ்சாயத்து ஆகும்
   a. 1 மட்டும் b. 2, 3 மட்டும் c. 2, 4 மட்டும் **d. அனைத்தும்**
7. இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சிய நிறுவனங்களை அறிமுகம் செய்த முதல் மாநிலங்கள்?
   **a. ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம்** b. உத்திரப்பிரதேசம், பீகார்
   c. குஜராத், கர்நாடகா d. எதுவுமில்லை
8. அசோக்மேத்தா குழு அறிக்கையை சமர்ப்பித்த ஆண்டு?
   a. 1976 **b. 1977** c. 1956 d. 1957
9. அரசியலமைப்பின் 73-வது மற்றும் 74-வது திருத்தங்கள் நடைமுறைக்கு வந்த நாள்?
   **a. 24 ஏப்ரல், 1993** b. 24 ஏப்ரல், 1992 c. 24 மார்ச், 1993 d. 24 ஏப்ரல், 1992
10. 73-வது சட்டத்திருத்தப்படி 11-வது இணைப்பு பட்டியலில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்?
   a. 18 **b. 29** c. 12 d. வரையறை இல்லை
11. 74-வது சட்டத்திருத்தப்படி 12-வது இணைப்பு பட்டியலில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்?
   **a. 18** b. 29 c. 12 d. வரையரற இல்லை
12. தவறான இணை எது?
   a. 10 லட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையை கொண்டவை மாநாட்சிகளாகும்
   b. மக்கள் தொகை 5000-த்திலிருந்து 50000-க்கு இடைப்பட்ட மக்கள்தொகை கொண்டவை நகராட்சிகளாகும்
   **c. மேயராக குறைந்தபட்ச வயது 25**
   d. மூன்று அடுக்குப் பஞ்சாயத்துமுறை மாவட்ட பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், கிராமப்பஞ்சாயத்து என மூன்று நிலைகளை கொண்டது

13. முதன்முதலில் மாவட்ட ஆட்சியாளர் பதவியை 1772-ல் உருவாக்கிய ஆங்கிலேயர்?
a. விக்டோரியா மகாராணி b. **வாரன்ஹேஸ்டிங்ஸ்**
c. காரன்வாலிஸ் d. டல்ஹௌசி

14. அரசியலமைப்பின் உயிரும் இதயமும் எனப்படுவது?
a. Art 18 b. Art 17 c. **Art 32** d. Art 14

15. சரியான இணை எது?
1. Art-170 மாநில சட்டசபை 2. Art - 171 மாநில சட்டமேலவை
3. Art - 356 மாநில அவசரநிலை 4. Art - 352 தேசிய அவசர நிலை
a. 1, 3 மட்டும் b. 2, 4 மட்டும் c. 1, 4 மட்டும் d. **அனைத்தும்**

16. மாநில மேலவைக்கு ஆளுநரால் நியமிக்கப்படுபவர்கள்?
a. 1/3 b. 1/12 c. **1/6** d. 1/2

17. சட்டசபையில் இயற்றப்படுகின்ற சாதாரண மசோதாக்களை மேலவை எத்தனை நாட்களுக்கு தாமதப்படுத்தலாம்?
a. 14 b. **30** c. 60 d. 75

18. ஒவ்வொரு மாநிலத்தில் ஆளுநருக்கு உதவி மற்றும் ஆலோசனை கூறுவதற்கு முதலமைச்சரை தலைவராக கொண்ட அமைச்சரவை இருக்கும் என்று கூறும் இந்திய அரசியலமைப்பின் விதி எது?
a. **163** b. 167 c. 169 d. 170

19. இந்திய பொதுவுடைமை கட்சி நிறுவப்பட்ட ஆண்டு?
a. **1924** b. 1964 c. 1958 d. 1943

20. நீதிபதிகள் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் பின்பற்றும் நாடு?
a. பிரான்ஸ் b. **சுவிட்சர்லாந்து** c. கிரீஸ் d. அமெரிக்கா

21. நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கும் முறையை பின்பற்றும் நாடு?
a. கனடா b. ஜப்பான் c. **பிரான்ஸ்** d. சுவிட்சர்லாந்து

22. சட்டங்களின் உயிர் (The Spirit of Laws) என்ற நூலின் ஆசிரியர்?
a. அம்பேத்கார் b. மேக்ஸ் வெபர் c. மாக்யவல்லி d. **மான்டெஸ்கியூ**

23. தேசிய ஒற்றுமையோடு மாநில உரிமைகளை பாதுகாத்து தர அமைக்கப்படும் அரசாங்க முறையே கூட்டாட்சி என்றவர்?
a. **டைசி** b. காந்திஜி c. அம்பேத்கார் d. அன்னாஹசாரே

24. அரசாங்க வடிவங்களை விளக்கியவர்?
a. டைசி b. **C.F.ஸ்டராங்கின்** c. கார்னர் d. மான்டெஸ்கியூ

25. சமுதாய ஒப்பந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவித்தவர்கள்?
a. ஜென்க்ஸ் b. மார்கன் c. **ரூஸோ** d. சர்ஹென்றிமெயின்

26. சரியான இணை எது?
1. லெவியாதன் (1651) - ஹாப்ஸ் 2. சிவில் அரசாங்கம் (1690) - லாக்
3. சமுதாய ஒப்பந்தம் (1762) - ரூஸோ
a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 3 மட்டும் d. **அனைத்தும்**

27. தாய்வழி கோட்பாட்டுடன் தொடர்பு இல்லாதவர்?
a. மக்லைன் b. மார்கன் c. ஜெனக்ஸ் d. **சர் ஹென்றி மெயின்**

28. உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை எனப்படுபவர்?
a. அசோக்மேத்தா b. பல்வந்த்ராய்மேத்தா c. நேரு d. **ரிப்பன்**

29. நீதிப்பேராணைகளின் எண்ணிக்கை?
a. 3 b. 4 c. **5** d. 6

30. என்.டி.ராமராவ் தெலுங்கு தேசம் கட்சியை தோற்றுவித்த ஆண்டு?
a. 1949 b. 1972 c. **1982** d. 1969

# திறனறிவு

1. கொடுக்கப்பட்ட பதில்களிலிருந்து விடுபட்ட எண்ணை கண்டறியவும்?

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 6 | ? | 18 |

a) 8 **b) 9** c) 10 d) 11

2. ஒரு மூலதனம் ரூ.800-லிருந்து ரூ.1,100-க்கு உயர்ந்தால் எவ்வளவு சதவிகிதம் அது உயர்ந்தது?
**a) 37.5%** b) 39% c) 40.5% d) 42%

3. r ஆரம் கொண்ட ஒரு கோளத்தின் கனஅளவு, அதன் பரப்பளவுடன் எதனை பெருக்குவதனால் கிடைக்கிறது?
a) 4/3 **b) r/3** c) 4r/3 d) 3r

4. $\frac{391}{667}$ ஐ சிறிய உறுப்பாக சுருக்குக.
**a) 17/29** b) 29/17 c) 92/71 d) 71/92

5. சுருக்குக $\left[3\frac{1}{4} \div \left\{1\frac{1}{4} - \frac{1}{2}\left(2\frac{1}{2} - \frac{1}{4} - \frac{1}{6}\right)\right\}\right]$
a) 68 **b) 78** c) 42 d) 24

6. $9a^2b^2, 18b^2c^2, 27c^2a^2$ -ன் மீ.பொ.வ. காண்க?
**a) 9** b) 18 c) 27 d) 36

7. 12 மனிதர்களும் 16 மாணவர்களும் சேர்ந்து ஒரு வேலையை 5 நாட்களில் முடிக்கின்றனர், 13 மனிதர்களும், 24 மாணவர்களும் சேர்ந்து அவ்வேலையை 4 நாட்களில் முடித்தால், தினமும் மனிதனும், மாணவரும் செய்யும் வேலையின் விகிதத்தைக் கூறு?
**a) 2 :1** b) 3 : 1 c) 3 : 2 d) 5 : 4

8. சுருக்குக $\left((260 \times 260) + \frac{1}{104 \times 104}\right) - \left(260 - \frac{1}{104}\right)^2 =$
a) 7 b) 26 **c) 5** d) 104

9. $A:B = \frac{1}{2}:\frac{3}{8}; B:C = \frac{1}{3}:\frac{5}{9}$ மேலும் $C:D = \frac{5}{6}:\frac{3}{4}$ எனில் $A:B:C:D$ க்கு சமமானது எது?
(A) 4 : 6 : 8 : 10 (B) 6 : 4 : 8 : 10
(C) 6 : 8 : 9 : 10 (D) 8 : 6 : 10 : 9

10. 217 x 217 + 183 x 183 = ?
a) 79698 **b) 80578** c) 80698 d) 81268

11. சாய்சதுரத்தின் பரப்பு =
a) மூலைவிட்டங்களின் பெருக்கல் b) 1/2 (மூலைவிட்டங்களின் கூடுதல்)
**c) 1/2 x மூலைவிட்டங்களின் பெருக்கல்** d) மூலைவிட்டங்களின் கூடுதல்

12. 2009-ம் ஆண்டு நாட்காட்டி எந்த ஆண்டின் நாட்காட்டிக்குச் சமமாக இருக்கும்?
a) 2013 **b) 2015** c) 2017 d) 2021

13. ஒரு தேர்வில் 10 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் 15, 75, 33, 67, 76, 54, 39, 12, 78, 11 எனில் இதன் கூட்டுச்சராசரியைக் காண்க?
a) 460 **b) 46** c) 23 d) 230

14. ஒரு எண்ணுடன் அந்த எண்ணின் 16% ஐ குறைக்க கிடைக்கும் எண் 42 எனில், அந்த எண்
**a) 50** b) 52 c) 58 d) 60

15. ரூ. 800 ஆனது தனிவட்டியில் 3 வருடத்திற்கு ரூ. 920 ஆகிறது, வருட வட்டி 3% உயர்த்தப்பட்டால் அதே காலத்தில் கிடைக்கும் தொகை எவ்வளவு?
a) ரூ. 1056 b) ரூ. 1112 c) ரூ. 1182 **d) ரூ. 992**

# <u>வரலாறு (சங்க காலம்)</u>

1. சரியான கூற்று எது?

1. கிரேக்க எழுத்தாளர்களான பிளினி, டாலமி, மெகஸ்தனிஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் தென்னிந்தியாவிற்கும் மேலை நாடுகளுக்கும் இடையே நிலவிய வர்த்தக தொடர்புகளை குறிப்பிட்டுள்ளனர்.
2. சேர, சோழ, பாண்டிய ஆட்சியாளர்கள் பற்றி அசோகரது கல்வெட்டுக்கள் கூறுகிறது.
3. கலிங்கத்து காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டு தமிழ்நாட்டு அரசுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
4. தமிழர்களின் வாணிப நடவடிக்கைகளை அறிக்காமேடு, பூம்புகார், கொடுமணல் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

a) 1,2,3 b) 2,3,4 c) 1,3,4 **<u>d) அனைத்தும்</u>**

2. இலங்கை அரசன் இரண்டாம் கயவாகு, சேர அரசன் செங்குட்டுவன் இருவரும் சம காலத்து அரசர்கள் என்பதை உறுதிபடுத்தாத நூல்?

a) சிலப்பதிகாரம் b) தீபவம்சம்
c) மகாவம்சம் **<u>d) மணிமேகலை</u>**

3. இலக்கியம், தொல்லியம், நாணயவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியங்களின் காலம் கி.மு. ................ நூற்றாண்டிலிருந்து கி.பி...... நூற்றாண்டு வரை என கூறலாம்.

**<u>a) 3-ஆம், 3-ஆம்</u>** b) 2-ஆம், 3-ஆம்
c) 3-ஆம், 2-ஆம் d) 4-ஆம்,5-ஆம்

4. சேர ஆட்சியாளர்களின் மூன்று தலைமுறைகளைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு?

a) வஞ்சி b) தொண்டி
c) முசிறி **<u>d) புகளூர்</u>**

5. சேரன் செங்குட்டுவன் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

a) கி.பி. 3-ஆம் நூற்றாண்டு **<u>b) கி.பி. 2-ஆம் நூற்றாண்டு</u>**
c) கி.பி. 5-ஆம் நூற்றாண்டு d) கி.பி. 6-ஆம் நூற்றாண்டு

6. சோழர்களின் தலைநகரங்கள்?

a) உறையூர் b) புகார்
**<u>c) a, b</u>** d) எதுவுமில்லை

7. கரிகாலசோழனின் இளமைக்காலம், போர்வெற்றிகள் பற்றிக் குறிப்பிடும் நூல்?

**<u>a) பட்டினப்பாலை</u>** b) சிலப்பதிகாரம்
c) மணிமேகலை d) எதுவுமில்லை

8. ................ ஆற்றின் குறுக்கே கல்லணையை கரிகாலன் அமைத்தான்?

**<u>a) காவிரி</u>** b) வைகை
c) தாமிரபரணி d) கங்கை

9. தமிழ்நாட்டில் பத்தினி வழிபாட்டை அறிமுகப்படுத்தியவர்?

a) பாண்டியன் நெடுஞ்செழியன் **<u>b) சேரன் செங்குட்டுவன்</u>**
c) இளங்கோவடிகள் d) முடத்திருமாறன்

10. சங்க காலத்தில் இவர்களுடைய படையெடுப்பால் பாண்டியர் ஆட்சி முடிவுக்கு வந்தது?

a) சாதவாகனர்கள் b) சோழர்கள்
**<u>c) களப்பிரர்கள்</u>** d) பல்லவர்கள்

11. சங்க காலத்தில் சோழ நாடு எனப்பட்ட பகுதி?

**<u>a) தற்கால திருச்சி மாவட்டம் முதல் தெற்கு ஆந்திரா வரை</u>**
b) தற்கால திருச்சி மாவட்டம் முதல் வடக்கு ஆந்திரா வரை
c) தற்கால கரூர் மாவட்டம் முதல் தெற்கு ஆந்திரா வரை
d) தற்கால மதுரை மாவட்டம் முதல் வடக்கு ஆந்திரா வரை

12. சங்க காலத்தில் தொன்மையான இலக்கண நூல்?

**<u>a) தொல்காப்பியம்</u>** b) சிலப்பதிகாரம்
c) மணிமேகலை d) எட்டுத்தொகை

# தேசிய இயக்கம்

1. இந்திய விடுதலைபோராட்டத்தில் பின்வரும் நிகழ்வுகளை கவனிக்கவும். காலவரிசை எது?
1. சௌரி சௌரா 2. மிண்டோ மார்லி சீர்திருத்தம்
3. தண்டியாத்திரை 4. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்
அ) 1, 3, 2, 4 **ஆ) 2, 4, 1, 3** இ) 1, 4, 2, 3 ஈ) 2, 3, 1, 4

2. கூற்று : இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்ற வங்கப்பிரிவினை ஓது தீப்பொறியாக அமைந்தது.
காரணம் : இந்திய தேசியத்தின் அடித்தளமாக வங்காளம் வளர்ந்து வந்தது.
**அ) (A) மற்றும் (R) சரியானவை. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.**
ஆ) (A) மற்றும் (R) சரியானவை. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
இ) (A) சரி ஆனால் (R) தவறு. ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

3. எது பொருந்தவில்லை?
1. இந்தியாவில் தேசியம் தோன்றக் காரணம் - லிட்டனது ஆட்சி
2. தீவிரவாதகளின் எழுச்சிக்கு காரணம் - கர்சனின் பிற்போக்கு கொள்கை
**3. சுயராஜ்யத்தை பிறப்புரிமையாக கருதியவர்கள் - மிதவாதிகள்**
4. பிரிட்டிஷாரின் நீதியுணர்வில் நம்பிக்கை கொள்ளாதவர்கள் - தீவிரவாதிகள

4. காலவரிசை படுத்துக.
1. ஜாலியன் வாலாபாக் 2. கேடாசத்தியாகிரகம்
3. சௌரி சௌரா நிகழ்ச்சி 4. சுயராஜியகட்சியின் தோற்றம்
**அ) 2, 1, 3, 4** ஆ) 1, 2, 3, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 2, 3, 1

5. பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டது யார்?
**அ) காந்தியும், டாக்டர் அம்பேத்காரும்** ஆ) முஸ்லீம்லீகும், காங்கிரசும்
இ) காந்தியும், மௌலானா அப்துல்கலாம் ஆசாத்தும்
ஈ) சுயராஜ்ய கட்சியும், ஜஸ்டிஸ் கட்சியும்

6. காலவரிசைப்படி அமைக்கவும்.
1. ஆகஸ்டு நன்கொடை 2. கிரிப்ஸ் தூதுக்குழு
3. வெள்ளையனே வெளியேறு இயக்கம் 4. இரண்டு நாடுகளின் பிரிவினை
**அ) 2, 1, 3, 4** ஆ) 1, 2, 3, 4 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 2, 3, 1

7. ஏறுவரிசைப்படுத்துக.
1. தனிநபர் சட்ட மறுப்பு இயக்கம் 2. கிரிப்ஸ் தூதுக்குழு
3. வெள்ளையனே வெளியேறு இயக்கம் 4. வேவல் திட்டம்
**அ) 1, 2, 3, 4** ஆ) 2, 1, 3, 4 இ) 4, 3. 2, 1 ஈ) 4, 2, 3, 1

8. **சரியானது எது,?**
1. சுதேசி இயக்கம் அன்னிபெசன்ட்
2. மராத்தா புறக்கணிப்பு இயக்கம்
3. தன்னாட்சி இயக்கம் ஆங்கில வார இதழ்
4. மின்டோ மார்லி சட்டம் 1909
அ) 1, 2, 4 **ஆ) 4** இ) 2, 4 ஈ) 3, 2

9. கூற்று (A) : திலகர் லக்னோ ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை
காரணம் (R) : திலகர் ஒரு தீவிரவாதி
அ) (A) மற்றும் (R) சரியானவை. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
ஆ) (A) மற்றும் (R) சரியானவை. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.
இ) (A) சரி ஆனால் (R) தவறு. **ஈ) (A) தவறு ஆனால் (R) சரி**

10. **பொருத்துக.**
1. கிலாபத் இயக்கம் 1927
2. சுயராஜியக் கட்சி 1920
3. சைமன் கமிசன் 1928
4. நேரு அறிக்கை 1923
**அ) 2 4 1 3** ஆ) 3 2 4 1 இ) 4 3 1 2 ஈ) 3 4 2 1

11. **பொருத்துக.**
1. ஈ.வே.ரா. பெரியார் நியூ + லேம்பஸ் ஃபர்ஓல்டு
2. அரபிந்தகோஷ ஆன் எக்கோ ப்ரம் அந்தமான்
3. தயானந்த சரஸ்வதி பேமலி ப்ளானிங்
4. வி.டி. சவர்கர் சத்தியர்த்த பிரகாஷ்
அ) 4 2 3 1 ஆ) 2 3 1 4 **இ) 3 1 4 2** ஈ) 1 4 2 3

# <u>நடப்பு நிகழ்வுகள்</u>

1. தவறான கூற்று எது?
1. தமிழகத்திற்கும், தமிழின வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை பெருமைப் படுத்தும் வகையில் 'தகைசால் தமிழர் விருது' 2021 முதல் தமிழக அரசு வழங்கிவருகிறது.
2. தகைசால் தமிழர் விருது பெற்றவர்கள் வரிசை சங்கரையா (2021), நல்லகண்ணு (2022), கி.வீரமணி (2023), குமரி ஆனந்தன் (2024)
3. தகைசால் தமிழர் விருது ரூ.10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழை உள்ளடக்கியது.
4. தகைசால் தமிழர் விருது ஆண்டு தோறும் ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினத்தன்று வழங்கப்படுகிறது.
a) 1, 2, 3 மட்டும் b) 2, 3, 4 மட்டும்
**<u>c) 4 மட்டும்</u>** d) அனைத்தும்

2. அருந்ததியின மக்களுக்கு 3% இடஒதுக்கீடு வழங்க டாக்டர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனன் தலைமையிலான குழுவை நியமித்த நியமித்த நாள்?
**<u>a) 25.03.2008</u>** b) 25.03.2006
c) 25.03.2007 d) 03.06.2009

3. 'குவாட்' கூட்டமைப்பில் இடம் பெறாத நாடு?
a) அமெரிக்கா b) ஜப்பான்
c) இந்தியா, ஆஸ்திரேலியா **<u>d) ரஷ்யா</u>**

4. 'முத்தமிழ் முருகன் மாநாடு 2024' எங்கு நடத்தப்படவுள்ளது?
a) திருச்செந்தூர் **<u>b) பழனி</u>**
c) திருப்பரங்குன்றம் d) திருத்தணி

5. மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் அவசர கால எண்?
**<u>a) 104</u>** b) 103
c) 102 d) 108

6. அரசுப் பள்ளிகளில் பயின்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் திட்டம்?
a) நான் முதல்வன்
b) தமிழ் மாணவன்
**<u>c) தமிழ்ப்புதல்வன்</u>**
d) மாணவர்களின் புதல்வன்

7. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மறைந்த நாள்?
**<u>a) 18.08.1945</u>** b) 18.08.1942
c) 18.08.1943 d) 18.08.1944

8. உழவன் செயலியை அறிமுகம் செய்த முதல்வர்?
a) கருணாநிதி b) மு.க.ஸ்டாலின்
c) ஓ.பன்னீர்செல்வம்
**<u>d) எடப்பாடி பழனிச்சாமி</u>**

9. விஸ்வம்பர டாக்டர். சி.நாராயணரெட்டி தேசிய இலக்கிய விருது தமிழ் எழுத்தாளர் சிவசங்கரிக்கு எந்த மாநிலத்தின் முதல்வராக வழங்கப்பட்டது?
a) ஆந்திரா **<u>b) தெலுங்கானா</u>**
c) கர்நாடகா d) மகாராஷ்டிரா

10. 'பிரிக்ஸ் 2024' மாநாட்டை நடத்தும் நாடு?
**<u>a) ரஷ்யா</u>** b) இந்தியா
c) தென்ஆப்பிரிக்கா d) பிரேசில்

11. பிஜி மற்றும் டிமோர் லெஸ்டே நாடுகளுக்கு செல்லும் முதல் இந்திய குடியரசுத்தலைவர்?
a) பிரதீபா பாட்டீல் **<u>b) திரௌபதி முர்மு</u>**
c) அப்துல்கலாம் d) ராம்நாத்கோவிந்த்

12. ஜம்மு-காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து Art 370, 35(A) ரத்து செய்யப்பட்டு எத்தனை ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது?
a) 3 b) 4 **<u>c) 5</u>** d) 6

13. நாடாளுமன்ற நிலைகுழுவில் .............. குழுக்களுக்கு மக்களவை எம்பிக்களும் ........... குழுக்களுக்கு மாநிலங்களவை எம்பிக்களும் தலைமை வகிப்பர்?
**<u>a) 16, 8</u>** b) 8, 16 c) 12, 12 d) 18, 6

14. வங்கதேச சுதந்திர போரில் பங்கு பெற்ற தியாகிகளின் வாரிசுகளுக்கு அரசுப் பணிகளில் ..............% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது?
a) 10 b) 20 **<u>c) 30</u>** d) 15

15. 'டி-20' உலககோப்பையின் கீழ்க்கண்ட எந்த பயிற்சியாளர் தனக்கு வழங்கப்பட்ட பரிசு தொகையை 50% என தாமாக முன்வந்து குறைத்து பெற்றார்?
a) ரோஹித்சர்மா b) தோனி
c) கங்குலி **<u>d) ராகுல் டிராவிட்</u>**

16. 'தரங் சக்தி 2024' எவ்விரு நாடுகளுக்கு இடையிலான விமான படையின் கூட்டுபயிற்சி?
a) இந்தியா-வங்கதேசம் b) இந்தியா-இலங்கை
c) இந்தியா-ரஷ்யா **<u>d) இந்தியா-பிரான்சிஸ்</u>**

17. நிதி அயோக் அறிக்கையின்படி சுகாதார குறியீட்டில் (Health Index) முதலிடம் பெறும் மாநிலம்?
a) தமிழ்நாடு **<u>b) கேரளா</u>**
c) தெலுங்கானா d) ஆந்திரா

18. நம்மாழ்வார் அவர்களின் இயற்கை விவசாயம் குறித்த ஆய்வு மையம் அமைந்திருக்கும் இடம்?
a) திருச்சி **<u>b) கோவை</u>**
c) மதுரை d) திருநெல்வேலி